**MLWA HSS (Run by Jain Educational & Empowerment Trust) Madurai**

**+1 Com Model Hly 2022**

Date : 03-Dec-22

11th Standard

வணிகவியல்

Reg.No. :

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Exam Time : 03:00:00 Hrs

Total Marks : 90

**பகுதி அ - சரியான விடையை தேர்ந்தெடு** 20 x 1 = 20

1) பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு_____ என்று பெயர்
(a) அங்காடி (b) சந்தை (c) நாளங்காடி (d) அல்லங்காடி

2) மருத்துவர் தொழில் என்பது
(a) வேலைவாயுப்பு (b) தொழில் (c) சிறப்புத் தொழில் (d) தனியார் வணிகம்

3) தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு
(a) வரையறு பொறுப்பு (b) வரையராப் பொறுப்பு (c) அமைப்பெளிமை (d) விரைவான முடிவு

4) கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
(a) ஒப்பந்தத்தால் (b) கூட்டாளிகளிடையே உறவு (c) அரசின் வழிகாட்டல் (d) நட்பின் அடிப்படையில்

5) கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?
(a) பட்டய (சாசன) நிறுமம் (b) அயல் நாட்டு நிறுமம் (c) அரசு நிறுமம் (d) சட்டமுறை நிறுமம்

6) பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன
(a) கிளைகள் (b) அதன் துணை நிறுவனங்கள் (c) தலைமையகம் (d) நாடாளுமன்றம்

7) இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, __________ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
(a) 1936 (b) 1935 (c) 1934 (d) 1933

8) பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக _____ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
(a) ஆவணம் (b) தனியார் (c) குளிர் சேமிப்பு (d) கூட்டுறவு

9) _____ ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக்கொள்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணம்.
(a) வழிச் சீட்டு (b) சரக்கு குறிப்பு (c) சார்ட்டர் (d) ஒப்பந்த இரசீது

10) எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது.
(a) சட்டம் (b) நெறிமுறை (c) ஒழுங்குணர்வு (d) பொருளாதாரம்

11) அமெரிக்க சந்தை தவிர்த்து, உலக சந்தையில் வெளியிடப்படும் வைப்பு இரசீது
(a) உலகளாவிய வைப்பு இரசீது (b) பன்னாட்டு வைப்பு இரசீது (c) வெளிச்சந்தை வைப்பு இரசீது
(d) மாற்று பத்திரம்

12) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
(a) 2004 (b) 2007 (c) 2006 (d) 2008

13) மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்வது
(a) வெளிநாட்டு வியாபாரம் (b) உள்நாட்டு வியாபாரம் (c) மறு ஏற்றுமதி வியாபாரம் (d) வியாபாரம்

14) வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?
(a) மொத்த வியாபாரி (b) உற்பத்தியாளர் (c) சில்லறை வியாபாரி (d) வாடிக்கையாளர்

15) நிரந்தர இடமின்றி வெவ்வெறு இடங்களுக்கு சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை _____ என்பர்.
(a) மடங்கு கடைகள் (b) முகவர்கள் (c) தெருக்கடை வியாபாரிகள் (d) சுற்றாடும் வியாபாரிகள்

16) EPC யின் விரிவாக்கம்
(a) ஏற்றுமதி செயல்முறை குழு (b) ஏற்றுமதி வளர்ச்சிக்குழு (c) ஏற்றுமதி சரக்கேற்றி குழு
(d) ஏற்றுமதி வளர்ச்சி காங்கிரஸ்

17) உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்
(a) 1-1-1996 (b) 1-1-1997 (c) 1-1-1995 (d) 1-1-1994

18) செலுத்தல் சம நிலை உள்ளடக்கியது
(a) நடப்பு கணக்கு (b) முதல் கணக்கு (c) பெறுதல் செலுத்தல் கணக்கு
(d) நடப்பு கணக்கு மாற்றும் முதல் கணக்கு

19) செல்லாத ஒப்பந்தம் குறிப்பது
(a) சட்டத்துக்கு முரணான ஒப்பந்தத்தின் இயல்பு (b) சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு
(c) சட்ட நடைமுறைகளை மீறுவதான ஒப்பந்தம் (d) பொதுக் கொள்கைக்கு எதிரான உடன்பாடு.

20) கணக்கீட்டு ஆண்டு என்பது
(a) ஏப்ரல் 2 முதல் மார்ச் 31 வரை (b) ஏப்ரல் 3 முதல் பிப்ரவரி 28 வரை (c) சூலை 1 முதல் சூன் 30 வரை
(d) சனவரி 2 முதல் டிசம்பர் 31 வரை

**பகுதி ஆ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாயம்** 7 x 2 = 14

21) பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
22) கூட்டுரு நிறுவனங்களைப் பற்றி சுருக்கமாக கூறுக
23) நிறுமம் வரைவிலக்கணம் தருக
24) கூட்டுறவு வரையறு
25) வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?
26) சமூக அதிகாரம் என்பதன் பொருள் தருக?
27) வைப்பு இரசீது என்றால் என்ன?
28) சுய உதவிக் குழு என்றால் என்ன?
29) ஒப்பந்தம் என்றால் என்ன?

30) மறைமுக வரியின் பொருள் தருக.

**பகுதி இ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாயம்** 7 x 3 = 21

31) பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
32) கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
33) அரசு நிறுமம் என்றால் என்ன?
34) காப்பீட்டின் வரைவிலக்கணம் தருக.
35) வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம் என்றால் என்ன?
36) தமிழ்நாட்டில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக
37) மொத்த வியாபரிகளின் பண்புநலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.
38) சார்க் அமைப்பின் பணிகள் யாவை ?
39) ஒப்பந்த நிறைவேற்ற கோரிக்கையை யார் விடுக்கலாம்?
40) குறிப்பு வரைக.
அ) நேரடி வரி
ஆ) மறைமுக வரி

**பகுதி ஈ - அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக

**(OR)**

b) வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி?

42) a) சிறு குறிப்பு வரைக
i) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்
2) மரபுசார் உற்பத்தித் தொழில்கள்
3) கட்டுமானத் தொழில்கள்

**(OR)**

b) பண்டகக் காப்பின் நன்மைகளை விவரி

43) a) கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

**(OR)**

b) நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக

44) a) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?

**(OR)**

b) ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரி .

45) a) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

**(OR)**

b) சுய உதவிக்குழுக்களின் நோக்கங்களை விவரி

46) a) உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**(OR)**

b) உள் நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

47) a) தொடர்வண்டிப் போக்குவரத்தின் நன்மைகள் யாவை?

**(OR)**

b) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி.

**எந்த சூழ்நிலையையும் எதிர்த்து நிற்கலாம் ...**
**தன்னம்பிக்கையும் துணிச்சலும் இருந்தால்...**

*******************************************

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

# MLWA HSS (Run by Jain Educational & Empowerment Trust) Madurai

**+1 Com Model Hly 2022**

Date : 23-Nov-22

11th Standard

Reg.No. :

**வணிகவியல்**

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Time : 03:00:00 Hrs

Total Marks : 90

**பகுதி அ - சரியான விடையை தேர்ந்தெடு** 20 x 1 = 20

1) (a) அங்காடி
2) (c) சிறப்புத் தொழில்
3) (b) வரையராப் பொறுப்பு
4) (a) ஒப்பந்தத்தால்
5) (d) சட்டமுறை நிறுமம்
6) (c) தலைமையகம்
7) (b) 1935
8) (c) குளிர் சேமிப்பு
9) (a) வழிச் சீட்டு
10) (c) ஒழுங்குணர்வு
11) (a) உலகளாவிய வைப்பு இரசீது
12) (c) 2006
13) (c) மறு ஏற்றுமதி வியாபாரம்
14) (a) மொத்த வியாபாரி
15) (d) சுற்றாடும் வியாபாரிகள்
16) (b) ஏற்றுமதி வளர்ச்சிக்குழு
17) (c) 1-1-1995
18) (d) நடப்பு கணக்கு மாற்றும் முதல் கணக்கு
19) (b) சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு
20) (a) ஏப்ரல் 2 முதல் மார்ச் 31 வரை

**பகுதி ஆ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாயம்** 7 x 2 = 14

21) ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.

22) கூட்டுருவாக்கம் பெற்ற நிறுவனங்கள் கூட்டுப்பங்கு நிறுமம், கூட்டுறவுச் சங்கம்.

23) நிறுமம் என்பது பல நபர்கள் ஒன்று சேர்ந்து ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதற்கு மூலதனத்தை வழங்கி அல்லது மூலதனத்தின் மதிப்பிலான பொருட்களை வழங்கி சில வணிகம் அல்லது வியாபாரத்தை தொடங்கி அதிலிருந்து கிடைத்த இலாப நட்டத்தை உள்ளவாறு அவர்கள் பகிர்ந்து கொள்வதாகும். ஜேம்ஸ் ஸ்டிபன்சன் "நிறுமம் என்பது நீடித்த வாழ்வுடனும் நிலை பெற்றுத் தொடர்ச்சியுடனும் பொது முத்திரையுடன் கூடிய சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபர்" இந்திய நிறுமச் சட்டம் (பிரிவு 2) 2013.

24) "கூட்டுறவு சங்கம் என்பது, உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கி கொள்வதற்காக, மனிதர்கள் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு. H.C கால்வெர்ட "கூட்டுறவு என்பது. சிறந்த விவசாயம். சிறந்த வணிகம் மற்றும் சிறந்த வாழ்க்கை முறையாகும். சர் ஹெரேஸ் பளங்கெட்.

25) (i) வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும் இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள் வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.
(ii) (எ.கா)பாங்க் ஆப் அமெரிக்கா -அமெரிக்கா.

26) தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது.அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிப்பதாக அமைகிறது.நாட்டின் மேம்பாடு கருதி வேலைவாய்ப்பு,பொருளாதார முன்னேற்ற அளவு மற்றும் அனைத்து தரப்பினருக்கும் வருமானத்தை பகிர்ந்தளித்தல் போனறவற்றை தீர்மானிக்கும் உயர் பொறுப்பு , தொழில் நிறுமங்களுக்கு உண்டு.

27) ஒரு வைப்புத் தொகை ரசீது என்பது, வெளிநாட்டு நிறுவனத்தின் நேர்மை பங்குகள் வாங்கியதற்கு சான்றாக, வங்கியால் வழங்கப்படும். ஒரு மாற்றுமுறை ஆவணமாகும்.

28) சுய உதவிக் குழு என்பது ஒரு சிறிய முறைசாரா தன்னார்வச் சங்கம் ஆகும்.உறுப்பினர்கள் ஒருவர்கொருவர் பொருளாதார உதவி செய்து கொள்ளவும் ஒருமைப்பாடு மற்றும்கூட்டுப் பொறுப்பு ஆகிய பண்புகளைப் பெறவும் இக்குழுக்கள் , உதவுகின்றன.சேமிப்பை திரட்டி அதன் மூலம் கடன் வசதிகளை இக்குழுக்களின் முக்கிய நோக்கமாகும்

29) இந்திய ஒப்பந்தச் சட்டம் 2(h)-ன் படி சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையே ஒப்பந்தமாகும்

30) சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது வரிவிதிக்கப்பட்டு விற்பனையனரால் வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு பின்னர் அரசுக்கு செலுத்தப்படும் வரியே மறைமுக வரி என அழைக்கப்படுகிறது.

**பகுதி இ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாயம்** 7 x 3 = 21

31) பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம், குமரி ஆகிய இடங்கள் ஆகும்.

32) கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இருந்தாலும் கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருந்தால், பிற்காலத்தில் தவறான கருத்துக்களினால் ஏற்படும் தகராறு மற்றும் மனக்கசப்புக்களைத் தவிர்க்கலாம். கூட்டாண்மை வியாபாரம் சிறப்பாக நடைபெற சரியான முறையில் தயாரிக்கப்பட்ட ஒப்பாவணம், மன வேற்றுமைகளை களைந்து கூட்டாளிகளை சிறப்பாக இயங்கச் செய்கிறது. இந்த ஒப்பாவணம் முறையாக தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.

33) 2013 - ஆம் ஆண்டு நிறுமச் சட்டப் பிரிவு 2(45)ன் கீழ் அரசு நிறுமம் என்பது மைய அரசு, மாநில அரசுகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் குறைந்தபட்சம் 51 விழுக்காட்டுக்கு மேல் மைய அரசோ, ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாநில அரசுகளோ அல்லது மைய அரசும் ஒன்று அல்லது மேற்பட்ட மாநில அரசுகளுமோ வைத்திருப்பின் அந்நிறுவனம் அரசு நிறுமம் ஆகும். ஒரு அரசு நிறுமத்தின் துணை நிறுமமும் அரசு நிறுமமாகவே கருதப்படும்

34)

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

ஜான் மெர்ஜ் என்பவரது வரைவிலக்கணப்படி தனி ஒருவருக்கு ஏற்படும் இடரை பலர் ஒன்றிணைந்து தங்களது தோள்களில் பகிர்ந்து கொள்ளும் திட்டமே காப்பீடு ஆகும்.

35) (i) மின்னணு வணிகப் பிரிவு சுமார் 4 கோடி நபர்கட்டு வேலை வாய்ப்பை நல்கி வருகிறது.
(ii) இணையதள சில்லறை வணிகம் இணையதள சேவை வர்த்தகம் போன்ற துறைகளில் தொடங்கப்படும் தொழில்களில் பெருகி வருகிறது.
(iii) மின்னணு வணிக நிறுவனங்கள்,பண்டங்கள் அமைத்தல் அளிப்பு சங்கிலித் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற கட்டமைப்பை உருவாக்கி மின்னணு வர்த்தகத்தை பலமானதாக மற்ற அதிக முதலீடுகளை செய்து வருகின்றன.

36) (i) தமிழ்நாட்டில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஏறத்தாழ அனைத்துப் பிரிவுகளிலும் பல்வேறு விதமான பொருட்களை தயாரிக்கின்றன.
(ii) இவற்றில் முன்னிற்பவை ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள் , தானியங்கி உதவி பொருட்கள் , தோல் பொருட்கள் இரசாயணம், நெகிழி (பிளாஸ்டிக் ) பொருட்கள் .
(iii) ஆயுத்த ஆடைகள் மற்றும் ஆபரண்கள் முதலானவை.தமிழ் நாட்டில் இத் துறையில் 12.94 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, சுமார் 81 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பிணை ஏற்படுத்தியுள்ளது

37) பின்வருபவை மொத்த வியாபாரியின் சிறப்பியல்புகள் ஆகும்.
(i) மொத வியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர்களிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
(ii) மொத்த வியாபாரிகள் பொருட்களை மொத்தமாக வாங்கி சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
(iii) மொத்த வியாபாரிகள் ஒரு குறிப்பிட்டப் பொருளின் பல்வேறு வகைகளை விற்பனை செய்கின்றனர்.
(iv) பொருட்களை விநியோகம் செய்ய முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
(v) இவ்வகை வியாபாரத்திற்கு பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.
(vi) மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு கடனுதவி அளிக்கின்றனர்.
(vii) மொத வியாபாரிகள் உற்பத்தியாளர்களுக்கும் நிதி உதவி செய்து தருகின்றனர்.
(viii) நகரங்கள் மற்றும் பெரும் நகரங்களிலும் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

38)

39) (i) வாக்குறுதி பெறுபவர் (Promise) : வாக்குறுதி பெறுபவர் மட்டுமே ஒப்பந்த நிறைவேற்றத்தை கோர உரிமையுள்ள நபர்.
(ii) சட்டரீதியான பிரதிநிதி Legal Representative): சில சூழ்நிலைகளில் சட்டரீதியான பிரதிநிதி நிறைவேற்றத்தை கோரலாம்.
(iii) மூன்றாவது நபர் (Third Person): விதிவிலக்காக சில சூழ்நிலைகளில் அயலார் கூட நிறைவேற்றத்தை கோரும் உரிமை பெறுகிறார்.

40) அ) நேரடி வரி: நேர்முக வரி என்பது யார் மீது வரி விதிக்கப்படுகிறதோ, அவரே அவ்வரியைச் செலுத்துபவர் ஆவார். அதாவது தனி நபரின் வருமானம் அல்லது அவரின் செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு அவரால் செலுத்தப்படும் வரியாகும்.
ஆ) மறைமுக வரி: மறைமுகவரிகளின் கீழ் வரித்தாக்கமும் வரி நிலைப்பாடும் வேறுபட்ட நபர்களின் மீது விழுகின்றன. எவை மற்றவர்களுக்கு மாற்றி அளிக்கப்படுகின்றன. உதாரணம் சரக்கு மற்றும் சேவை வரி, அதாவது சரக்கு மட்டும் சேவைகளை வழங்கும் விற்பனையாளர் மீது வரி விதிக்கப்படுகிறது. ஆனால் அவர் அதை வாங்குபவரால் செலுத்தப்படும் வரியாக மாற்றப்படுகிறது. இதுவே மறைமுக வரியாகும்.

**பகுதி ஈ - அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a)
(i) ஆள்சார் தடை
(ii) இடத்தடை
(iii) காலத்தடை
(iv) இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்க தடை
(v) நட்ட இடர்பாட்டு தடை
(vi) அறிசார் தடை
(vii) பண்டப் பரிமாற்றத் தடை
(viii) நிதித் தடை
(ix) பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பத்தில் தடை
(x) பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல்.

**(OR)**

b)
வெளிநாட்டு வியாபாரம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி, ஏற்றுமதி, மறு ஏற்றுமதி வியாபாரம்.
(i) இறக்குமதி: உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டிலிருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும். உதாரணமாக, இந்தியா வளைகுடா நாடுகளிலிருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதைக் கூறலாம். இந்தியா இயந்திர சாதனங்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. விரைவான இயந்திரமயமாக்களுக் காகவும், நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இறக்குமதி வணிகம் தவிர்க்க செய்யவும்.
(ii) ஏற்றுமதி: உள்நாட்டு உற்பத்தி பொருட்களை வெளிநாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.
(iii) உதாரணம்:
1. இந்தியா, இரும்பு மற்றும் எஃகு போன்றவற்றை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்கிறது.
2. இந்தியா ஜெர்மனி நாட்டிற்கு தேயிலை ஏற்றுமதி செய்கிறது.
3. மதுரையிலிருந்து சிங்கப்பூருக்கு மல்லிகைப் பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
4. உள்நாட்டில் தேவைக்கு மிகுதியாக உள்ள பொருட்களை விற்பதற்கும், உள்நாட்டு இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும், அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கும், தேசிய வருமானத்தை உயர்த்துவதற்கும், நிறை வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், அரசு வருவாயை மிகவும் அவசியமானதாகும்.
(iv) மறு ஏற்றுமதி வியாபாரம்: ஒரு நாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பனை செய்வது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.
(v) உதாரணம்:
1. இந்தியாவில் சூரத் நகரில் உள்ள வைர வியாபாரிகள் தென் ஆப்பிரிக்காவில் இருந்து துண்டாக்கப்படாத வைரங்களை இறக்குமதி செய்து, அவற்றைத் துண்டாக்கி, பட்டை தீட்டி, மீண்டும் ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ள பன்னாட்டு வைரச் சந்தைக்கு மறு ஏற்றுமதி செய்கிறார்கள்.
2. சிங்கப்பூர், துபாய், ஹாங்காங், லண்டன் ஆம்ஸ்டர்டாம் ஆகிய நாடுகள் மிகப்பெரிய மறு ஏற்றுமதி மையங்களாக செயல்படுகின்றன.
3. இறக்குமதி செய்யும் நாட்டில் போதுமான அளவுவங்கி வசதிகள் இருக்கும் போதும், தொடர்ந்து அயல் நாட்டு வணிகம் செய்யும் அளவிற்கு சரக்குகள் இல்லாதிருக்கும் போதும், ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கும், பொருட்களை நுகரும் நாட்டிற்குமிடையே நேரடித் தொடர்பு ஏற்படுத்துவது சிக்கலாக இருக்கும் போதும் மறு ஏற்றுமதி வணிகம் அவசியமாகிறது.

42) a)
அ. ஆராய்ச்சி தொழிற்சாலை: ஆராய்ச்சி தொழிற்சாலை என்பது பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களை ஆராய்ச்சி செய்து எடுப்பதாகும். (எ.கா. தங்கம், நிலக்கரி, கச்சா எண்ணெய் எடுப்பது முதலியவை ஆகும்.)
ஆ. மரபுசார் தொழிற்சாலை : தாவரங்களும் மிருகங்களும், நுகர்வோரின் உபயோகத்திற்கு வளர்க்கப்படுவன.. எனவே இவை மரபுகள் உற்பத்தி தொழிற்சாலை எனப்படுகின்றன.(எ.கா.) கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு போன்றவை.
இ. கட்டுமானத் தொழிற்சாலை :கட்டுமானங்கள், கட்டிடங்கள், பாலங்கள் சாலைகள் மற்றும் அணைகள் காட்டாத தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையே கட்டுமானத் தொழிற்சாலை ஆகும்.

**(OR)**

b)

**பண்டக காப்பின் நன்மைகள்**

1. சரக்குகளை சேமித்து வைக்க இட வசதி இல்லா வியாபாரிகளின் சரக்குகளை பாதுகாக பயன்படுகின்றது.
2.சரக்குகள் மொத்தமாக சேமித்து வைப்பது மூலம் வியாபாரிகளின் விநியோக செலவுகளை குறைக்கிறது மற்றும் வியாபாரிகள் தங்களுக் தேவைப்படும் பொருட்களை சிறிய அளவி எடுத்துக்கொள்ள உதவுகிறது.
3.இது வழங்கல் வழியை தீர்மானிக்க உதவுகிறது உற்பத்தியாளர் இதன் மூலம் மொத்த வியாபா அல்லது சில்லறை வியாபாரி நியமிக்கலாம் என முடிவு செய்ய உதவுகின்றது.
4.இது ஆண்டு முழுவதும் விற்பனைக்கு உதவுகிறது மற்றும் பொருள் இல்லை என்ற நிலை ஏற்படாமல் தவிர்க்கிறது. 5.திறமையான மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் இருவருக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துகின்றது.

43) a)

| அடிப்படை | கப்பல் இரசீது | கப்பல் வாடகை முறி |
|---|---|---|
| 1.பொருள் | இது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்க கூடிய ஆவணமாகும். | இது சரக்கை அனுப்ப மொத்த கப்பலையோ அல்லது பெரும் கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும். |
| 2. மாற்றும் தன்மை | இதை எளிது மேலெழுதுதல் வாயிலாக மூன்றாம் நபருக்கு மாற்றித்தர முடியும். | இதை மூன்றாம் நபருக்கு மாற்றி தர முடியாது. |
| 3.கடன் பெறுதல் | இதை பிணையமாக வைத்து கடன் பெறலாம் | இதை பிணையமாக வைத்து கடன் பெற முடியாது. |
| 4.குத்தகை | இது கப்பலை குத்தகை எடுத்ததற்கான ஆதாரம் அல்ல | இது கப்பலை குத்தகை எடுத்ததற்கான ஆதாரம் ஆகும். |

**(OR)**

b)

| அடிப்படை | நேர்முகவரி | மறைமுக வரி |
|---|---|---|
| பொருள் | நேர்முக வரி என்பது நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது. | மறைமுக வரி என்பது சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது. |
| இயல்பு | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| வரி நிலைப்பாடு மற்றும் வரித்தாக்கம் | ஒரே நபரையே சென்றடைகிறது. | பல்வேறு நபர்கள் மீது விழுகின்றன. |
| வகைகள் | சொத்து வரி, வருமானவரி நிறம் வரி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் | மத்திய விற்பனை வரிகள், மதிப்பு கூட்டு வரி, சேவை வரி, உள் நாட்டுவரி சுங்க வரி. |
| ஏய்ப்பு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் உண்டு. | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் குறைவு. |
| பணவீக்கம் | நேர்முக வரி பண வீக்கத்தைக் குறைக்க உதவுகிறது. | மறைமுக வரி பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது. |
| விதித்தல் மற்றும் வசூலித்தல் | மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்படுகிறது. | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு ஆனால் மதிப்பீட்டிற்குரியவரால் செலுத்தப்படுகிறது. |
| சுமை | மாற்ற முடியாது. | மாற்ற முடியும் |
| நிகழ்வு | மதிப்பீட்டிற்குரியவரின் வரிக்குரிய வருமானம் மற்றும் செல்வத்தை சார்ந்தது. | சரக்குகளை கொள் முதல் விற்பனை உற்பத்தி செய்தல் மற்றும் சேவை வழங்குதல் ஆகியவற்று சார்ந்தது. |

44) a)

(i) கூட்டாண்மையின் பெயர்.
(ii) நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை.
(iii) கூட்டாண்மையின் காலவரையறை.
(iv) கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை.
(v) கூட்டாண்மையிலிருந்து கூட்டாளிகள் எடுக்கும் தொகை.
(vi) இலாப நட்டப்பகிர்வு விகிதம் இல்லையெனில் சமமாக
(vii) மூலதனத்தின் மீது வட்டி பெறும் உரிமையுண்டு.
(viii) எடுப்பு தொகை மீதான வட்டி விகிதம்.
(ix) கூட்டாளிகள் தரும் கடன் அதன் மீதான வட்டி
(x) கணக்கு வைப்பு கணக்கேடுகளை பராமரித்தல் பார்வையிடுதல்.
(xi) கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு.
(xii) கூட்டாளிகள் விலகல்/ இறந்து விட்டால் கணக்கை தீர்க்கும் முறை.
(xii) நற்பெயர் மதிப்பிடல், கூட்டாளி சேர்ப்பின்பொழுதும் விலகலின் பொழுதும் மதிப்பிடல்.
(xiv) பொறுப்பு பகிர்வு மேலாண்மை பொறுப்பை பகிர்வு செய்தல்.
(xv) கூட்டாண்மை கலைப்பு நடைமுறைகள்
(xvi) கூட்டாளிகளிடையே ஏற்படும் தகராறுகளை தீர்க்கும் முறைகளையும் மற்றும் நடுவர் தீர்ப்பிற்கு விடும் நடைமுறைகளையும் குறிப்பிடல் வேண்டும்.

**(OR)**

b)

(i) கடன் ஏடுகளை பராமரித்தல் : தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக்கடன்களை பராமரிக்கும் முழு பொறுப்பினை தனி உரிமை பேராள் ஏற்றுக் கொள்கிறார்.
(ii) கடன் எல்லைகளை நிர்வகித்தல் : வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையை தனி உரிமை பேராளன் ஏற்றுக்கொள்கிறார்.இதனால் வணிகத்தொடர்புடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக் கவனம் செலுத்துகிறார்.
(iii) ரொக்க முன்பணம் ஏறத்தாழ கடன் விற்பனையில் ஏறக்குறைய 80 சதவீதம் முன்கூட்டியே வணிகர் பெற்று வருகிறார்.இதனால் தன்னுடைய வியாபார நீர்மை தன்மை பாதிக்கப்படுகிறது.
(iv) வசூல் சேவை வாடிக்கையாளர்களுக்கு நினைவு கூறச் செய்தல் பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல் ஏனைய சேவைகளும் இந்த சேவையில் அடங்கும்.
(v) தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்:
தனி உரிமை பேராளர் கடந்த காலங்களில் வாடிக்கையாளரிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபாரச் செய்திகளை உடனுக்குடன் வழங்குதல்.

45) a)

செயல்முறை ஏடு என்பது கூட்டுப்பங்கு நிறுமத்தை எப்படி அன்றாடம் நடத்திச் செல்வது என்ற விவரத்தை அடங்கிய ஏடு.
(i) பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.
(ii) ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள் அதாவது ஓட்டுரிமை, பங்காதாயம் , பங்கு முதலை திரும்பப் பெறுதல் போன்றவை.
(iii) பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.
(iv) பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்த அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.
(v) பங்கு மாற்றம் குறித்த விதிகள்
(vi) பங்காதாயம் அறிவித்தல்
(vii) நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம்.
(viii) இயக்குநர்களின் நியமனம் ஊதியம் மற்றும் நீக்கம்.
(ix) கூட்டங்களை நடத்துதல் பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்.
(x) நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்.
(xi) நிறுமத்தின் பொதுமுத்திரை.
(xii) நிறுமச் கலைப்பு தொடர்பான நடைமுறைகள்.

**(OR)**

b)

(i) பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது
(ii) முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்
(iii) பெண்களின் திறமையை உருவாக்கி ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபட செய்வது
(iv) பொருளாதரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் மனங்களில் சேமிப்பு பழக்கத்தை உருவாகுதல்
(v) பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்
(vi) கடன் வட்டம் அல்லது சுழல் நிதி மன் றும் சுழற்சி கடன் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தல்
(vii) உறுப்பணிர்களின் குடும்ப பொருளதாரம் அதிகார மேலாண்மைனா திறமையை வளர்த்தல் மற்றும் கடன் தொடர்புகளுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்
(viii) உறுப்பினர்கள் தங்களின் பொருளாதார சிக்கலுக்கு அவர்களாவே தீர்வு காண்பதற்கான விழிப்புணர்வு பயிற்சியினை அளித்தல்
(ix) குழு உறுப்பினர்களின் பொதுவான விருப்பங்களை அறிந்து குழு நடவடிக்கைகள் முடிவு செய்தல் திறமையான மற்றும் சிக்கனமான முறையில் நடவடிக்கைகளை முன்னேடுத்துச் செல்லுதல்
(x)உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் அனைத்து சமூகப் பொருளாதாரத் தடைகளையும் வெற்றியுடன் எதிர்கொள்ள அவர்களை தயார்படுத்துதல்
(xi) வாழ்க்கை சுழற்சியில் எல்லா நிலைகளிலும் பெண்களுக்கான மனித உரிமைகளை உறுதி செய்தல்

46) a)

உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள்

| வேறுபாட்டின் அடிப்படைகள் | வலைகளாவிய வைப்பு இரசீது (GDR) | அமெரிக்க வைப்பு இரசீது(ADR) |
|---|---|---|
| மதிப்பிடுதல் | இது எந்த பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும். | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும். |
| யாருக்கு இது வெளியிடப்படும் | ஒன்று அல்லது அதற்குமேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும். | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| எங்குப் பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்த இதர பங்கு மாற்றகங்கள்.(எ.கா) இலண்டன் பங்கு மாற்றக வாரியம், லக்சம்பர் பங்கு மாற்றக வாரியம் போன்றவை | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப்படும். |
| ஒப்புதல் | உலகளாவிய இரசீதை வெளியிட அன்னியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவையில்லை. | அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்கத்தின் ஒப்புதல் தேவை. |
| வெளியீட்டு வழிமுறை | உலகளாவிய இரசீதுகள் பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப்பங்குகளாக வெளியிடப்படும். | பல அமெரிக்க வைப்பு இரசீதுகள் தொடர்புடைய சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மை பங்குகளாக வெளியிடப்படும் |
| மாற்றுகைத்தன்மை | உலகம் முழுவதும் மாற்றக் கூடியது | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது |

**(OR)**

b)

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| அடிப்படை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| 1. பொருள் | உள்நாட்டு வணிகம் ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். | பன்னாட்டு வணிகம் நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கை ஆகும். |
| 2. வியாபாரத்தில் பங்கு பெறுவோர் | ஒரு நாட்டில் உள்ள மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில்பங்கேற்கின்றனர். | ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி உள்ள மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். |
| 3. உற்பத்திக் காரணிகள் இடம் பெயர்தல் | மூலப் பொருள், உழைப்பு, முதல் மற்றும் தொழில் நுட்பம் போன்ற உற்பத்திக் காரணிகள் தடைஇன்றி நாட்டின் எல்லைக்குள் இடம் பெயர முடியும். | மூலப் பொருள், உழைப்பு, முதல் மற்றும் தொழில் நுட்பம் போன்ற உற்பத்திக் காரணிகள் ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி இடம் பெயர முடியாது. |
| 4. நுகர்வோரின் தன்மை | உள்நாட்டு வணிகத்தில் கலாச்சாரம், நடத்தை சுவை விருப்பம், சட்டமுறை, பழக்கவழக்கங்கள் ஆகியவை ஒரே மாதிரியாக இருக்கும். | பன்னாட்டு வணிகத்தில் கலாச்சாரம், நடத்தை சுவை விருப்பம், சட்டமுறை, பழக்கவழக்கங்கள் ஆகியவை வேறுபட்டதாக இருக்கும். |
| 5. வியாபார முறை | உள்நாட்டு வணிகத்தை ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள், வரிவிதிப்பு முறை ஆகியவை நெறிப்படுத்துகின்றன. | பன்னாட்டு வணிகத்தை பல நாடுகளின் விதிகள், சட்டங்கள் வரிவிதிப்புகள் மற்றும் அளவு ஆகியவை நெறிப்படுத்துகின்றன. |
| 6. பயன்படுத்தும் நாணயம் | உள் நாட்டு வணிகத்தில் உள்ளூர் நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | பன்னாட்டு வணிகத்தில் அயல்நாட்டு நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப் படுகின்றன. |
| 7. போக்குவரத்து முறை | உள்நாட்டு வணிகத்தில் சாலை மற்றும் இரயில் போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | பன்னாட்டு வணிகத்தில் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது. |
| 8. இடர் காப்பின்மை | இடரின் அளவு குறைவு. | இடரின் அளவு அதிகம். |
| 9. சந்தையின் அளவு | நாட்டின் எல்லைக்கு உட்பட்டது. | நாட்டின் எல்லையைத் தாண்டி பரந்த அளவு செல்கிறது. |
| 10. சுங்கத் தீர்வை செலுத்துதல் | சுங்கத் தீர்வையும் சுங்கத் தீர்வை செலுத்த வேண்டிய நடைமுறைகளும் மிகவும் குறைவு. | சுங்கத் தீர்வையும் சுங்கத் தீர்வை செலுத்த வேண்டிய நடைமுறைகளும் அதிகமானவை மற்றும் சிக்கலானவை. |

47) a)

**(i) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகள்**

1. நீண்ட தூரத்திற்குள் கனரக மற்றும் பருமனான பொருட்களை செல்லுவதற்கு மிகவும் பொருத்தமானது.
2. தடையற்ற சேவைகளால் நீண்ட தொலைவு பயணத்தை பகல் மற்றும் இரவு முழுவதும் வழங்க முடியும்.
3. மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட பொருட்களுக்குச் சிறந்த உற்பத்தி மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும்.
4. ஆரம்ப முதலீடு பெரியதாக இருந்தாலும், தொடர்வண்டி ஓட்ட செலவினங்கள் தொடர் வண்டியில் மிகக் குறைவாக இருக்கும், மேலும் அது மலிவான போக்குவரத்து முறையை நிரூபிக்கும்.
5. இது ஒரு வழக்கமான கால அட்டவணையுடன் ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.
6. மழை அல்லது வெயிலான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படாத சேவைகளை வழங்குகிறது.

**(OR)**

b)

இடரை பலரால் பகிர்ந்து கொள்ளப்படுவதற்காக காப்பீடு ஏற்படுத்தப்பட்டது.ஒவ்வொரு காப்பீடு ஒப்பந்தமும் கூட்டுறவு தத்துவத்தின் அடிப்படையில் உருவாகிறது.

(i) மிக்க நம்பிக்கை : இக்கோட்பாட்டின்படி காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.காப்பீடு பெறுநர் கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநகருக்கு தெரியப்படுத்திட வேண்டும்.

(ii) காப்பீடு பெறுநலன் ; காப்பீடு பெறுநருக்கு காப்பீடு செய்யப்பட்டு கருப்பொருள் மீது காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.காப்பீடு பெறுநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலை குறிக்கிறது.

(iii) ஈட்டுறுதி : ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும்.காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டுள்ளதோ அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்கப்படும்.

(iv) அண்மைக் காரணம் : ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின் அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காண வேண்டியதை பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும்.

(v)பகிர்ந்தளித்தல் : ஒரு கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு இரட்டை காப்பீடு என்று பெயர்.காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்மந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படியில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.

(vi) பகர உரிமை : 'பகர உரிமை' என்பது ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை காப்பீடு தருநர் ஈடு செய்த பின் காப்பீடு பெருநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும்.காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது.

(vii) இழப்பை மட்டுப்படுத்தல்: காப்பீடு பெறுநர் காப்பீடு செய்த கருப்பொருளுக்கு விபத்து நேரும் போது காப்பீடு தருநருக்கு ஏற்படும் இழப்பைக் குறைக்கும் அல்லது மட்டுப்படுத்தும் வண்ணம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593